©
GOVERNMENT OF TAMIL NADU
2021

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 12.00 Paise.

தமிழ்நாடு அரசிதழ்

சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 413A] சென்னை, திங்கட்கிழமை, செப்டம்பர் 13, 2021
ஆவணி 28, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு-2052

பகுதி IV—பிரிவு 1

தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

பொருளடக்கம்

சட்டமுன்வடிவுகள்:	*பக்கங்கள்.*
எண் 41/2021—தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டம்	2-6
எண் 42/2021— தமிழ்நாடு பாரதியார் பல்கலைக் கழகத் (திருத்தச்) சட்டம்..	7-8
எண் 43/2021— தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம்	9-18
எண் 44/2021— தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டம்	19-20
எண் 45/2021— தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம்	21-23
எண் 46/2021— தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண்.2) சட்டம்	24-29

2021—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2021

1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு .

இந்தியக் குடியரசின் எழுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டமானது, 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) 2—ஆம் பிரிவின் உட்பிரிவு (1) மற்றும் (4) மற்றும் 4—ஆம் பிரிவானது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும் மற்றும் மீதமுள்ள பிரிவுகள் 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1—ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

12 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன் பின்பு, இதில் முதன்மைச் சட்டம் எனக்குறிப்பிடப்படுவதான) 1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின், 12 ஆம் பிரிவில்,— தமிழ்நாடு சட்டம் XX/ 1951.

(1) (2—A)ஆம் உட்பிரிவானது, விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(2) (2—AA) எனும் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

“(2AA) சட்டமன்றப்பேரவை உறுப்பினர் எவரும் அவருடைய பதவிக்காலம் முடியும் முன்னரே இறக்கிறவிடத்து, அவரது குடும்பத்திற்கு ஒட்டுமொத்த படித்தொகையாக ஐந்து லட்சம் ரூபாய் வழங்கப்படுதல் வேண்டும்.”.

(3) (2—B) —ஆம் உட்பிரிவிற்காக, அதன் கீழுள்ள விளக்கம் நீங்கலாக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

“(2—B). (2—AA) ஆம் உட்பிரிவின்படி வழங்கப்படலாகும் ஒட்டுமொத்த படித்தொகையானது குடும்ப உறுப்பினர்களுக்கு சம பங்காக வழங்கப்படுதல் வேண்டும்.”.

(4) (4—A) ஆம் உட்பிரிவில், (a) எனும் கூறிற்கு பின்பு, பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

“வரம்புரையாக, குளிரூட்டப்பட்ட படுக்கை வசதியுடைய பேருந்துகளாக இருக்கும் நேர்வில், அத்தகைய உறுப்பினரின் வாழ்க்கைத்துணை அல்லது உடனிருப்பவருக்கு இருக்கை வசதி மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும்.”.

12— B ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 12— B ஆம் பிரிவின், (1) ஆம் உட்பிரிவில்—

“இருபதாயிரம் ரூபாய்” எனும் சொற்றொடருக்காக, “இருபத்தைந்தாயிரம் ரூபாய்” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

12– C ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 12-C ஆம் பிரிவில், **(1)** ஆம் உட்பிரிவிற்கு பின்பு, பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

“வரம்புரையாக, குளிரூட்டப்பட்ட படுக்கை வசதியுடைய பேருந்துகளாக இருக்கும் நேர்வில், அத்தகைய உறுப்பினரின் வாழ்க்கைத்துணை அல்லது உடனிருப்பவருக்கு இருக்கை வசதி மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும்.”.

செல்லுந்தன்மை.

5. முதன்மைச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், **2020** ஏப்ரல் **1** ஆம் நாளன்று தொடங்குகின்ற காலத்தின் போது மற்றும் இந்தச் சட்டத்தை **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்பட்ட தேதி வரையிலும் ஒட்டுமொத்த படித்தொகை அல்லது ஓய்வூதியம் வழங்குவதற்காக, முதன்மைச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அல்லது செய்யப்பட்ட செயல் அனைத்தும் அத்தகைய செயல் அல்லது நடவடிக்கையை செய்யப்பட்ட அல்லது எடுக்கப்பட்ட அனைத்து நேரிய காலங்களிலும் இந்தச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்ட முதன்மைச் சட்டமானது செயல்முறையில் இருந்ததைப் போன்று அச்சட்டத்திற்கிணங்க செல்லத்தக்கதாக செய்யப்பட்டதாக அல்லது எடுக்கப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும்.

நோக்கக் காரண விளக்கவுரை

2020 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் **24** ஆம் நாளன்று, முன்னாள் முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் பின்வரும் அறிவுப்புகளை வெளியிட்டார்,–

(a) சட்டமன்றப் பேரவை அமர்வு உறுப்பினர் எவரும் அவருடைய பதவிக்காலத்தில் இறந்துவிட்டபோது அவரது குடும்பத்திற்கு வழங்கப்படலாகும் ஒட்டுமொத்த படித்தொகையானது ரூ.**2,00,000/–** [இரண்டு இலட்சம்]– ரூபாயிலிருந்து ரூ.**5,00,000/–** [ஐந்து இலட்சம்] ரூபாயாக அதிகரிக்கப்படும்;

(b) சட்டமன்ற பேரவை மற்றும் சட்டமன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினர்களுக்கு வழங்கப்படலாகும் ஓய்வூதியமானது ரூ.**20,000/–** [இருபதாயிரம்] ரூபாயிலிருந்து ரூ.**25,000/–** [இருபத்தைந்தாயிரம்] ரூபாயாக அதிகரிக்கப்படும்;

(c) இறந்துவிட்ட சட்டமன்றப் பேரவை மற்றும் சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் சட்டப்படியான வாரிசுகளுக்கு வழங்கப்படலாகும் குடும்ப ஓய்வூதியமானது ரூ.**10,000/–** [பத்தாயிரம்] – ரூபாயிலிருந்து ரூ.**12,500/–** [பன்னிரெண்டாயிரத்து ஐந்நூறு] – ரூபாயாக அதிகரிக்கப்படும்;

(d) மேற்சொன்ன பணப்பயன்களானது, **2020** ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் **1** ஆம் நாள் முதல் நடைமுறைப்படுத்துப்படும்;

(e) சட்டமன்றப் பேரவையின் அமர்வு மற்றும் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினர்கள், மாநில அரசுக்கு சொந்தமான போக்குவரத்து கழகத்தின் குளிரூட்டப்பட்ட பேருந்து எதிலும் அவரின் வாழ்க்கைத்துணை அல்லது உடனிருப்பவருடன் பயணம் மேற்கொள்ளும்போது அந்தப்பேருந்தில் அத்தகைய உறுப்பினருக்கு ஒரு படுக்கை வசதி வழங்கப்படுதல் வேண்டும் மற்றும் வாழ்க்கைத்துணை அல்லது உடனிருப்பவருக்கு ஒரு இருக்கை வசதி வழங்கப்படுதல் வேண்டும்.

2. மேற்சொன்ன முடிவுகளுக்கு செயல்வடிவம் கொடுப்பதற்கு, அரசானது, **1951** ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் XX/**1951**) தக்கவாறு திருத்துவதென முடிவுசெய்துள்ளது.

3. இச்சட்ட முன்வடிவு, மேற்சொன்ன முடிவுகளுக்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

மு.க. ஸ்டாலின்,
முதலமைச்சர்.

நிதி பற்றிய குறிப்பு

இச்சட்ட முன்வடிவு சட்டமாக இயற்றப்படும்போது, மாநிலத் தொகு நிதியத்திலிருந்து செலவு செய்ய நேரிடும். எனினும், இந்நிலையில் இந்தச் சட்டம் இயற்றப்படுவதன் விளைவாக ஏற்க நேரிடும் செலவுத் தொகையினை எந்த அளவிலும் துல்லியமாக மதிப்பிட இயலாது.

மு.க. ஸ்டாலின்,
முதலமைச்சர்.

சென்னை-600 009,
2021 செப்டம்பர் 13.

கி. சீனிவாசன்,
செயலாளர்.

2021—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் **13—**ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் **130—**ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது**.**

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2021

1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2021-ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 1/1982.

24-ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1981 - ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்தில் 24-ஆம் பிரிவில், (b)-கூறில், "வகை II- பிற உறுப்பினர்கள், என்ற தலைப்பின் கீழ், (7)-வது இனத்திற்குப் பிறகு, பின்வரும் இனமானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"(8) இணைவு பெற்ற தனியார் கல்லூரிகளின் (உதவி பெறும் மற்றும் சுயநிதி) கல்லூரி குழுக்களின் செயலாளர்களுக்கிடையேயிருந்து அரசால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்கள்".

நோக்கக் காரண விளக்கவுரை.

மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தின் நீதிப்பேராணை மனு எண். 12478/2019 மற்றும் நீதிப்பேராணை (பல்வகை) மனு எண்.12752 / 2019 ஆகியவற்றில் 01-07-2019 தேதியிட்ட ஆணையின் அடிப்படையில், பாரதியார் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவில் போதிய பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்காக, தமிழ்நாடு சுயநிதி கலை, அறிவியல் மற்றும் மேலாண்மைக் கல்லூரிகளின் சங்கத்தின் முறையீடானது ஆட்சிக்குழுவின் முன்பு வைக்கப்பட்டது. ஆட்சிக்குழுவின் 20-08-2019 தேதியிட்ட இதன் மீதான தீர்மானத்தையும், பாரதியார் பல்கலைக்கழக பதிவாளரின் (பொறுப்பு) கருத்துருவினையும் கவனமாக கருத்தில் கொண்டு, இணைவு பெற்ற தனியார் கல்லூரிகளின் (உதவி பெறும் மற்றும் சுயநிதி) கல்லூரி குழுக்களின் செயலாளர்களுக்கிடையேயிருந்து அரசால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களை, பாரதியார் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குழுவில் சேர்த்துக் கொள்வதற்காக 1981 – ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 1/1982) திருத்துவதென அரசானது முடிவு செய்துள்ளது.

2. இந்த சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

முனைவர். க. பொன்முடி,
உயர்கல்வித் துறை அமைச்சர்.

சென்னை-600 009,
2021 செப்டம்பர் 13.

கி. சீனிவாசன்,
செயலாளர்.

2021—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் **13—**ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் **130—**ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது**.**

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2021

மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆகியவற்றில் இளநிலை படிப்புகளுக்கான சேர்க்கையானது தகுதித் தேர்வில் பெறப்பட்ட மதிப்பெண்களின் அடிப்படையில் வழங்குவதற்கானதொரு சட்டமுன்வடிவு.

2019 ஆம் ஆண்டு தேசிய மருத்துவ ஆணையச் சட்டம் (மையச் சட்டம் 30/2019), 1948 ஆம் ஆண்டு பல்மருத்துவச் சட்டம் (மையச் சட்டம் 16/1948), 1970 ஆம் ஆண்டு இந்திய மருத்துவ மையக்குழுமச் சட்டத்தின் (மையச் சட்டம் 48/1970) கீழ் உருவாக்கப்பட்ட 1986 ஆம் ஆண்டு இந்திய மருத்துவ மையக் குழும (இந்திய மருத்துவ கல்வியில் குறைந்த பட்ச தரநிலைகள்) ஒழுங்குமுறைகள் மற்றும் 1973ஆம் ஆண்டு ஓமியோபதி மையக் குழுமச் சட்டத்தின் (மையச் சட்டம் 59/1973) கீழ் உருவாக்கப்பட்ட 1988 ஆம் ஆண்டு ஓமியோபதி (பட்டப்படிப்பு) ஒழுங்குமுறைகள் ஆகியன, முறையே, மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆகியவற்றில் இளநிலை படிப்புகளின் சேர்க்கைக்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு நடத்துவதற்கு வகை செய்கிறது என்பதாலும்;

மற்றும் தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (நீட்) அடிப்படையிலான சேர்க்கை செயல்முறையானது, சமூக பொருளாதார மற்றும் கூட்டாட்சி அரசியல் மற்றும் அரசுப்பள்ளிகளில் தமிழ் வழிக்கல்வியில் பயின்ற கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழை மாணவர்கள் அல்லது மாநிலத்தில் உள்ள மாணவர்களின் பிற பிரிவுகள் எவற்றையும் மோசமாக பாதித்துள்ளதா என்பதை ஆய்வு செய்யவும், மற்றும் அவ்வாறிருப்பின் தடைகளை நீக்குவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை பரிந்துரைக்கவும் சமூக நீதிக் கோட்பாடுகளை முன்னெடுப்பதற்கான அரசின் உரிமைகளைப் பாதுகாக்கவும் மேலும் தமிழ்நாட்டின் அனைத்து பிரிவு மக்களுக்கும் சுகாதாரத்திற்கு சமமான மற்றும் நடுநிலையான அணுகுதலை வழங்குவதற்கான அரசியலமைப்பின் ஆணையினை நிறைவேற்றுவதற்காகவும், நீதியரசர் திரு.ஏ.கே.இராஜன், (சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி) அவர்களின் தலைமையின் கீழ் ஓர் உயர்மட்ட குழுவானது அமைக்கப்பட்டது என்பதாலும்;

மற்றும் தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வானது மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான ஒரு நடுநிலையான முறையா என்பதை ஆய்வு செய்யவும் மேலும் மாநிலத்தில் தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு பயிற்சி மையங்கள் விரைந்து பெருகி வளர்தலின், கல்வி முறையின் மீதான விளைவைக் கருத்தில் கொள்வதும் உயர்மட்டக் குழுவிற்கு தேவையானதாகிறது என்பதாலும்;

தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு இன்னும் சில ஆண்டுகளுக்கு தொடர்ந்தால் தமிழ்நாட்டின் சுகாதார அமைப்பு மிகவும் மோசமாக பாதிக்கப்படும் என்றும், ஆரம்ப சுகாதார மையங்கள் அல்லது அரசு மருத்துவமனைகளில் போதுமான மருத்துவர்கள் பணியமர்த்தப்பட இயலாமல் போகலாம் என்றும், கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழை மாணவர்கள் மருத்துவப் படிப்புகளில் சேர முடியாமல் போகலாம் என்றும், இந்த பொருட்கூறில் மேற்கொண்ட விரிவான ஆய்வில் உயர்மட்டக் குழுவானது முடிவு செய்துள்ளது என்பதாலும்;

மற்றும், தேவையான சட்ட மற்றும் / அல்லது சட்டமன்ற நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் அனைத்து நிலைகளில் மருத்துவ படிப்புகளுக்கான சேர்க்கையில் தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு முறையினை பயன்படுத்திக் கொண்டிருப்பதை நீக்குவதற்கு மாநில அரசானது உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று உயர்மட்டக் குழுவானது பரிந்துரைத்துள்ளது என்பதாலும்;

மற்றும், சமூகத்தின் செல்வமிக்க பிரிவினருக்கு சாதகமாக இருப்பதினால், தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு ஒரு நேர்மையான அல்லது நடுநிலையான சேர்க்கை முறையல்ல என்பது உயர்மட்டக் குழுவின் அறிக்கையிலிருந்து தெளிவாகிறது என்பதாலும்;

மற்றும் பொது நுழைவுத் தேர்வை விட்டுவிடுவதன் மூலம் மட்டுமே மருத்துவக் கல்வியின் தரநிலையானது ஒரு போதும் செறிவு குன்றிவிடாது அல்லது பாதிப்பிற்குள்ளாகாது என்பதாலும்;

மற்றும் மாநில அரசானது, உயர்மட்டக் குழுவின் பரிந்துரையை கவனமாகக் கருத்தில் கொண்ட பின்பு, சமூக நீதியை உறுதி செய்யும் நோக்கில், மாநிலத்திலுள்ள மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆகியவற்றில் இளநிலை படிப்புகளுக்கான சேர்க்கையானது, தகுதித் தேர்வில் அதாவது மேல்நிலைத் தேர்வில் (பன்னிரெண்டாம் வகுப்பு) பெறப்பட்ட மதிப்பெண்களின் அடிப்படையில் மட்டுமே செய்யப்படுதல் வேண்டும் என முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்;

இந்தியக்குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம் 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்

(2) இது மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாக குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. இந்தச் சட்டத்தின் தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,— பொருள் வரையறைகள்

(a) "தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு" என்பது, எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ்., பி.எஸ்.எம்.எஸ்., பி.ஏ.எம்.எஸ்., பி.யு.எம்.எஸ்., மற்றும் பி.எச்.எம்.எஸ்., ஆகிய படிப்புகளுக்கான சேர்க்கைக்காக மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் ஒதுக்கீடு செய்வதற்கும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகம் அல்லது ஓர் அதிகார அமைப்பு என்று பொருள்படும்;

(b) "கல்வி நிறுவனம்" என்பது பல்கலைக்கழகத்துடன் ஒருங்கிணைக்கப் பட்ட மற்றும் தகுதி வாய்ந்த சட்டமுறை அமைப்புக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ்., பி.எஸ்.எம்.எஸ்., பி.ஏ.எம்.எஸ்., பி.யு.எம்.எஸ் மற்றும் பி.எச்.எம்.எஸ் ஆகிய படிப்புகளை நடத்துகின்ற சிறுபான்மையினர் நிறுவனம் உள்ளடலங்கலான, எந்தப் பெயராலும் அழைக்கப்படுகின்ற ஒரு நிறுவனம் அல்லது கல்லூரி எதுவும் என்று பொருள்படும்;

(c) "அரசு" என்பது மாநில அரசு என்று பொருள்படும்;

(d) "அரசு இடங்கள்" என்பது,—

(i) 'அனைத்திந்திய ஒதுக்கீடுக்காக' ஒதுக்கப்பட்ட இடங்களைத் தவிர, அரசுக் கல்லூரிகளில் உள்ள எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ்., பி.எஸ்.எம்.எஸ்., பி.ஏ.எம்.எஸ்., பி.யு.எம்.எஸ்., மற்றும் பி.எச்.எம்.எஸ் படிப்புகளில் அனைத்து இடங்கள் என்று பொருள்படும்;

(ii) சிறுபான்மையினரல்லாத கல்வி நிறுவனங்களில் உள்ள எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ்., பி.எஸ்.எம்.எஸ்., பி.ஏ.எம்.எஸ்., பி.யு.எம்.எஸ்., மற்றும் பி.எச்.எம்.எஸ்., படிப்புகளில் 65 விழுக்காடு இடங்கள் மற்றும் சிறுபான்மை கல்வி நிறுவனங்களில் 50 விழுக்காடு இடங்கள் அல்லது அத்தகைய நிறுவனங்கள் மற்றும் அரசிற்குமிடையேயான கருத்திசைவுடன் இணங்கிய வகையிலான இடங்கள் என்று பொருள்படும்;

(e) "அரசுப்பள்ளிகள்" என்பது அரசுப் பள்ளிகள், மாநகராட்சிப் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகள், கள்ளர் சீர் திருத்தப் பள்ளிகள், வனத்துறைப் பள்ளிகள் மற்றும் அரசுத் துறைகளினால் நிர்வகிக்கப்படும் பிறபள்ளிகள் ஆகியவற்றை உள்ளடக்கும்;

(f) "சிறுபான்மையினர் கல்வி நிறுவனம்" என்பது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வரையறைகளுக்குட்பட்டு அரசினால் இசைவு பெற்ற அல்லது அத்தகையவாறு அறிவிக்கப்பட்ட ஒரு கல்வி நிறுவனம் என்று பொருள்படும்;

(g) "தனியார் பள்ளிகள்" என்பது ஓர் அரசுப் பள்ளியல்லாத பள்ளி என்று பொருள்படும்;

(h) "தகுதித் தேர்வு" என்பது தமிழ் நாடு மேனிலைத் தேர்வு குழுமத்தினால் மேனிலை (பன்னிரெண்டாம் வகுப்பு) அளவில் அல்லது மத்திய இளநிலை கல்விக் கழகத்தினால் அல்லது பிற மாநிலத்தின் குழுமம் எதனினாலும் அல்லது பிற அதிகார அமைப்பு எதனினாலும் நடத்தப்படும் இணையான தேர்வு எதுவும் என்று பொருள்படும்;

(i) ''தொடர்புடைய பாடங்கள்'' என்பது எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ்., பி.எஸ்.எம்.எஸ்., பி.ஏ.எம்.எஸ்., பி.யு.எம்.எஸ்., மற்றும் பி.எச்.எம்.எஸ் படிப்புகளுக்கான சேர்க்கைக்காக பரிந்துரைக்கப்படலாகும் பாடங்கள் என்று பொருள்படும்;

(j) ''மாநிலக் குழுமம்'' என்பது தமிழ்நாடு மேனிலைத் தேர்வுகள் குழுமம் என்று பொருள்படும்;

(k) ''அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள்'' என்பது ஓர் அரசுப் பள்ளியில் ஆறாம் வகுப்பு முதல் மேனிலைப் பள்ளி படிப்பு வரை பயின்ற குழந்தைகள் என்று பொருள்படும்.

விளக்கம்.— இந்த பொருள் வரையறையின் நோக்கத்திற்காக, 2009 ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் 12ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் (C) ஆம் கூறின்படி ஒரு குறிப்பிட்ட வகையிலான பள்ளி அல்லது ஓர் உதவி பெறாத பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை பயின்ற மற்றும் அரசுப் பள்ளியில் மேனிலைப் படிப்பு வரை மீதமுள்ள அனைத்து வகுப்புகளையும் பயின்ற நலிவுற்ற பிரிவினைச் சார்ந்த குழந்தைகள், 'அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள்' என்று கருதப்படுதல் வேண்டும்; மையச் சட்டம் 35 / 2009.

(l) ''பல்கலைக்கழகம்'' என்பது மாநில சட்ட மன்றத்தின் ஒரு சட்டத்தினால் உருவாக்கப்பட்ட அல்லது ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகம் என்று பொருள்படும்.

அரசு இடங்களுக்கான சேர்க்கை

3. பிற சட்டம் எதிலும் அல்லது அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகள், ஒழுங்குமுறை விதிகள், அறிவிக்கைகள் அல்லது துணை விதிகள் எதிலும் உள்ளடங்கிய எது எவ்வாறிருப்பினும், தகுதித் தேர்வில் தொடர்புடைய பாடங்களில் ஒரு மாணவரால் பெறப்பட்ட மதிப்பெண்களின் அடிப்படையில் ஒவ்வொரு அரசு இடத்திற்கான சேர்க்கையானது தகுதிவாய்ந்த அதிகார அமைப்பினால் செய்யப்படுதல் வேண்டும்.

மதிப்பெண்களை நெறிப்படுத்துதல்.

4. (1) பல்வேறு குழுமங்கள் அல்லது அதிகார அமைப்பினால் நடத்தப்பட்ட தகுதித் தேர்வில் தொடர்புடைய பாடங்களில் மாணவர்களால் பெறப்பட்ட மதிப்பெண்களானவை, மாநிலக் குழுமத்தினால் நடத்தப்பட்ட தகுதித் தேர்வில் அதே பாடங்களில் மாணவர்களால் பெறப்பட்ட மதிப்பெண்களுடன் நெறிப்படுத்துதல் முறையை மேற்கொண்டு சமநிலைப்படுத்துதல் வேண்டும்.

விளக்கம்.— நெறிப்படுத்துதல் முறையின் கீழ், பல்வேறு குழுமங்களின் மாணவர்களால் ஒவ்வொரு பாடத்திலும் பெறப்படும் உயர்ந்தபட்ச மதிப்பெண்களானவை மாநில குழுமத்தின் மாணவர்களால் அப்பாடத்தில் பெறப்பட்ட உயர்ந்தபட்ச மதிப்பெண்களுடன் சமநிலைப்படுத்தப்படுதல் வேண்டும் மற்றும் பிற மாணவர்களால் அப்பாடத்தில் பெறப்பட்ட தொடர்புடைய மதிப்பெண்கள் அதற்கிணங்கிய வகையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

எடுத்துக்காட்டு.— மாநிலக்குழுமத்தின் மாணவரால் இயற்பியலில் பெறப்பட்ட உயர்ந்தபட்ச மதிப்பெண் 100 ஆகவும் மற்றும் பிற குழுமம் எதனின் மாணவரால் அதே பாடத்தில் பெறப்பட்ட உயர்ந்தபட்ச மதிப்பெண் 96 ஆகவும் இருந்தால், இவ்விரண்டு உயர்ந்தபட்ச மதிப்பெண்களும் 100க்கு சமமாக கருதப்படும். பிற குழுமத்தின் மாணவர் ஒருவர் இயற்பியலில் 80 மதிப்பெண் பெற்றிருந்தால், அதே குழுமத்தில் இயற்பியலில் முதல் மதிப்பெண் 96 ஆக இருக்கையில், 80 மதிப்பெண்களானது கீழே குறிப்பிட்டவாறு 83.33 மதிப்பெண்களுக்கு சமமாகக் கருதப்படுதல் வேண்டும்.

$$\frac{100 \times 80}{96} = 83.33\%$$

(2) வெவ்வேறு குழுமங்களால் நடத்தப்பட்ட தகுதித் தேர்வில் தொடர்புடைய பாடங்களின் மதிப்பெண்கள் முறைப் படுத்தப்பட்ட பிறகு, வெவ்வேறு குழுமங்களின் தகுதியடைந்த மாணவர்கள், பொதுத் தகுதிப் பட்டியலில் ஒன்றிணைக்கப்படுதல் வேண்டும்.

(3) பொதுவான தகுதிப்பட்டியலில் சமமான மதிப்பெண்களை ஒன்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பெற்றிருக்கும் நேர்வில், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் அத்தகைய மாணவர்களுக்கிடையே தகுதியானது இச்சட்டத்தின்படி உருவாக்கப்பட்ட விதிகளினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(4) தகுதிவாய்ந்த அதிகார அமைப்பானது அரசு இடங்களுக்கான மாணவர்களின் சேர்க்கைக்கான தரவரிசைப் பட்டியலை தயார் செய்து மற்றும் மையப்படுத்தப்பட்ட கலந்தாய்வின் மூலம் மாணவர்களை ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

இட ஒதுக்கீட்டிற்கான பொருந்துகை.

5. அரசு இடங்களுக்கான சேர்க்கையானது நடைமுறையிலுள்ள சட்டத்தின்படி இடஒதுக்கீட்டு விதியினைப் பின்பற்றி செய்யப்படுதல் வேண்டும்.

முன்னுரிமை அடிப்படையிலான சேர்க்கை.

6. தற்போது நடைமுறையிலுள்ள சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மற்றும் 5—ஆம் பிரிவிற்குட்பட்டு அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு அரசு இடங்களின் ஏழரை விழுக்காடானது முன்னுரிமையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

பிற இடங்களுக்காக போட்டியிடும் உரிமை பாதிக்கப்படாது

7. முன்னுரிமையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களைத் தவிர பிற அரசு இடங்களுக்காக தனியார் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுடனிணைந்து போட்டியிடுவதற்கு அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் உரிமையுடையவராகுதல் வேண்டும்.

முன்னுரிமை இடங்களை நிரப்புதல்.

8. 6 ஆம் பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களின் எண்ணிக்கையானது முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களுக்கான சேர்க்கைக்காக போதுமானதாக இல்லாதவிடத்து, அத்தகைய நிரப்பப்படாத இடங்களானது, தனியார் பள்ளிகளில் படித்த மாணவர்களைக் கொண்டு நிரப்பப்படுதல் வேண்டும்.

சட்டத்தை மீறி செய்யப்பட்ட சேர்க்கை.

9. தற்போது நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதிலும், அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டம் அல்லது அதன்படி உருவாக்கப்பட்ட விதிகளின் வகைமுறைகளினை மீறி உருவாக்கப்பட்ட சேர்க்கை எதுவும் செல்லாநிலையாகுதல் வேண்டும்.

தண்டம்.

10. (1) இந்தச் சட்டம் அல்லது அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் வகைமுறைகளை மீறுபவர் எவராகிலும், பத்து லட்சம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத்தொகையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதையும் கல்வி நிறுவனம் எதுவும் மீறியுள்ளதாக அரசு மனநிறைவு அடைந்தால், அத்தகைய நிறுவனத்தின் இணைப்பு அல்லது ஏற்பளிப்பை திரும்பப் பெறுவதற்காகவோ அல்லது அது பொருத்தமென கருதலாகும் பிற தொடர் நடவடிக்கை எதற்காகவும், தொடர்புடைய பல்கலைக்கழகத்திற்கோ அல்லது சட்டமுறை அமைப்பிற்கோ பரிந்துரைக்கலாம்.

நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு பாதுகாப்பு.

11. உரிமை வழக்கு, குற்றவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எதுவும் இந்தச் சட்டம் அல்லது விதி எதுவும் அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட ஆணை எதுவும் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதற்காகவும் அரசு அல்லது அதன் பணியாளர்கள் தகுதிவாய்ந்த அதிகார அமைப்பின் பணியாளருக்கெதிராக தொடரப்படுதல் ஆகாது.

பணிப்பாணைகளை வழங்குவதற்கான அதிகாரம்.

12. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு செயல் வடிவம் கொடுப்பதற்காக, அது உகந்ததென்று கருதலாகும் அத்தகைய பணிப்பாணைகளை அரசு அவ்வப்போது வழங்கலாம்.

இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

13. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு செயல்வடிவம் கொடுப்பதில் இடர்பாடு ஏதேனும் எழுமானால், அரசு தமிழ்நாடு அரசிதழில் ஆணை ஒன்றினை வெளியிடுவதன் மூலமாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத வகையில் அத்தகைய இடர்பாட்டை நீக்குவதற்காக தேவையானதென்று அல்லது உகந்ததென்று தனக்கு தோன்றக்கூடிய அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்.

வரம்புரையாக, அத்தகைய ஆணை எதுவும் இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டாண்டுகள் முடிவடைந்த பின்னர் செய்யப்படுதல் ஆகாது.

விதிகளை செய்வதற்கான அதிகாரம்.

14 (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட அனைத்து விதிகளும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை ஒரு குறிப்பிட்ட நாளன்று நடைமுறைக்கு வரும் என்று சொல்லப் பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில் அந்த வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும் அவை ஒரு குறிப்பிட்ட நாளன்று செயலாற்றலுக்கு வரும் என்று சொல்லப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட அந்த நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அந்தக் கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை ஏதொன்றிலும் மாறுதல் எதையும் சட்டமன்றப் பேரவை செய்யுமாயின்

அல்லது அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை செய்யப்படுதல் ஆகாது அல்லது பிறப்பிக்கப்படுதல் ஆகாது என சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமாயின் அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை அதன் பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்வுக்கேற்ப, நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும் அத்தகைய மாற்றம் அல்லது நீக்கம் எதுவும் அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை முன்னதாகச் செய்யப்பட்ட செயல் எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

நோக்கக் காரண விளக்கவுரை

2017—2018 ஆம் கல்வி ஆண்டிலும், அது முதற்கொண்டும், நாடு முழுவதும் அனைத்து மருத்துவ கல்வி நிறுவனங்களிலும், இளநிலை மருத்துவ மற்றும் முதுநிலை மருத்துவ அளவிலான சேர்க்கையானது பொது நுழைவுத் தேர்வில், [அதாவது தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (நீட்)] பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் இருந்து வருகிறது. தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (நீட்) அடிப்படையிலான சேர்க்கை முறையானது சமூக, பொருளாதார மற்றும் கூட்டாட்சி அரசு மற்றும் கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழை மாணவர்களில், அரசுப் பள்ளிகளில் பயின்றவர்கள், தமிழ் வழியில் கல்வி பயின்றவர்கள் அல்லது தமிழ் நாட்டின் பிற பிரிவினைச் சேர்ந்த மாணவர்கள் எவரையும் மோசமாக பாதித்துள்ளதா என, ஓர் உயர்மட்டக் குழுவினால் ஒரு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது மற்றும் குழுவானது, அதன் அறிக்கையில், சலுகைக்குன்றிய சமூகப் பிரிவினரால் மருத்துவக்கல்வியை அடையும் கனவிற்கு இடையூறாக இருக்கையில் முக்கியமாக சமூகத்தில் இயலும் நிலையிலுள்ள மற்றும் பொருளாதார வளமிகுந்த பிரிவினருக்கு சாதகமாக இருந்து, எம்.பி.பி.எஸ் மற்றும் உயர் மருத்துவ படிப்புகளிலுள்ள பலதரப்பட்ட சமூகப் பிரதிநிதித்துவத்தை தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வானது குறைத்து மதிப்பிட்டுள்ளது என தெரிவித்துள்ளது. மருத்துவக்கல்விக்காக போட்டியிட்டவர்களின் சமூக பொருளாதார மற்றும் பிற மக்கட்தொகை சார்நிலைக்கு தொடர்பான பல பரிமாணங்களிலான பகுப்பாய்வு இந்த உண்மையை மெய்ப்பித்துள்ளது. குறிப்பாக, மருத்துவக்கல்வியில் குறைந்த சமூக பொருளாதார மற்றும் பிற மக்கட்தொகை சார்நிலையினை கொண்டுள்ள சமூக மற்றும் பிற மக்கட்தொகை பிரிவினரின் பிரதிநிதித்துவத்தை தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு கைவிட்டுள்ளது. தமிழ் வழியில் கல்வி பயின்ற, கிராமப்புற பின்னணியை கொண்டுள்ள அரசுப் பள்ளியின் மாணவர்கள், பெற்றோரின் ஆண்டு வருமானம் 2.5 இலட்சத்திற்கும் குறைவாக கொண்டுள்ளவர்கள் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் போன்ற சமூக ரீதியாக தாழ்த்தப்பட்ட பிரிவினர், பெரும்பாலும் பாதிக்கப்பட்ட சமூக பிரிவினர் ஆவர். எனவே, இப்பிரிவினருக்கு தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு எதிரானது என, குழுவானது முடிவு செய்கிறது. எம்.பி.பி.எஸ் மாணவர்களின் தகுதி அல்லது தரத்தினை தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு அதன் வரம்பெல்லையின் கீழ் உறுதி செய்வதாக தெரியவில்லை. ஒப்பிடுகையில், குறைந்த செயல்திறன் கொண்ட (தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு மதிப்பெண்கள் மற்றும் மேனிலை மதிப்பெண்களில்) மாணவர்கள் எம்.பி.பி.எஸ்க்கு சேர்க்கை பெறுவதற்கு மட்டுமே தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு இயலச்செய்துள்ளது மற்றும் உரிமை கொடுத்துள்ளது என்பதை அறிக்கை முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. எனவே, மாணவர்களின் தரம் மற்றும் தகுதியை தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வானது உறுதி செய்கிறதா என்ற வினா நிராகரிக்கப்படுதல் வேண்டும். ஒப்பிடுகையில், தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வுக்கு முந்தைய காலகட்டத்தில் சேர்க்கைகள் வழங்கப்பட்டதன் அடிப்படையான மேனிலை மதிப்பெண்கள் தரமான மற்றும் தகுதிவாய்ந்த மாணவர்களின் நுழைவை உறுதி செய்வதாக கருதப்படுகின்றது. குழுவானது மற்றவற்றுக்கிடையில் மருத்துவக்கல்வியின் அனைத்து நிலைகளிலும் தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு அகற்றப்பட வேண்டியதன் அவசியத்தை குறிப்பிடும் வகையில் 2006—ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சார் கல்வி நிறுவனங்களில் சேர்க்கை சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 3/2007) போன்றதொரு சட்டத்தை மாநில அரசானது நிறைவேற்றலாம் என்றும் அதற்காக குடியரசு தலைவரின் ஒப்புதலை பெறலாம் என்றும் பரிந்துரை செய்துள்ளது. இது சமூக நீதியை உறுதி செய்யும் மற்றும் மருத்துவக்கல்விக்கான சேர்க்கையில் பாகுபாடு காட்டுவதிலிருந்து அனைத்து பாதிப்பிற்குள்ளாக கூடிய மாணவர் சமுதாயங்களையும் பாதுகாக்கும்.

2. தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வானது, சேர்க்கைக்கான ஒரு நடுநிலையான முறையல்ல என்பது குழுவின் அறிக்கையிலிருந்து தெளிவாகிறது. மருத்துவம் மற்றும் பல் மருத்துவ படிப்புகளில் சேர விரும்பும் தமிழ்நாட்டு மாணவர்களின் குறிப்பாக சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்புகளைச் சார்ந்த மாணவர்களின் நம்பிக்கையையும் கனவுகளையும் தேர்வானது தகர்த்துள்ளது என கடந்த நான்கு ஆண்டுகளின் தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வின் அனுபவமானது காண்பித்துள்ளது. தகுதித் தேர்வு தவிர, மாணவர்கள் கட்டாயமாக எதிர்கொள்ளும் கூடுதல் தேர்வானது, சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்புகளைச் சார்ந்த மாணவர்களுக்கு பெரும் நிதிச்சுமையை ஏற்படுத்தியுள்ளது. XII—ஆம் வகுப்பைத் தவிர, பிற சிறப்பு பயிற்சியை பெறக்கூடிய சமூகத்தின் பொருளாதார வளமிகு மற்றும் அதிக சலுகை பெற்ற வகுப்பினரை ஆதரித்து, இது சமத்துவமின்மையை வளர்க்கிறது. இது மருத்துவம் மற்றும் பல் மருத்துவக் கல்வியிலிருந்து சலுகை குன்றிய சமூகப் பிரிவுகளை மெய்நிகராக தடுக்கிறது. இது அரசியலமைப்பின் சாராம்சமான சமத்துவ கூறின் நோக்கத்திற்கு எதிராக உள்ளது மற்றும் சமூகத்தின் சலுகை குன்றிய வகுப்பினைச் சேர்ந்த குழந்தைகளின் கல்வி உரிமையை மறுக்கிறது. மேலும் இளநிலை பட்டப்படிப்புக்குப் பிறகு வசதியான வகுப்பைச் சேர்ந்த இந்த மாணவர்கள் கிராமப்புறங்களில் சேவை செய்வதில்லை. அவர்கள் பெரும்பாலும் வெளிநாட்டில் முதுநிலை பட்டப் படிப்பைத் தொடர்கின்றனர். இதனால் மாநிலத்தில் பணியாற்றி வரும் மருத்துவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. மேலும் தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வானது மருத்துவக்கல்வியின் தரத்தை மேம்படுத்துகிறது என்று பரிந்துரைப்பது போலியானது. தேசிய மருத்துவ ஆணையத்தினால் வகுத்துரைக்கப்பட்ட பாடத்திட்டத்தினாலும் கல்வித்திட்டத்தினாலும் மற்றும் பட்டம் வழங்கப்படுவதற்கு முன்பு பல்கலைக்கழகம் நடத்தும் தேர்வினை பின்பற்றுவதனாலும் இளநிலை படிப்பின் போது மருத்துவக் கல்வியின் தரமானது பேணப்படுகிறது. பல்கலைக்கழக தேர்வுகளில் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்படுவதில்லை. எனவே, மருத்துவக்

கல்வியின் தரமானது சேர்க்கையின் போது மட்டும் பேணப்படுவதில்லை. மேலும் 2017ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே உயர்ந்தபட்ச எண்ணிக்கையிலான மருத்துவம் மற்றும் பல் மருத்துவக்கல்வி நிறுவனங்களைக் கொண்டுள்ள மாநிலங்களுள் தமிழ்நாடு ஒன்றாக இருந்தது மற்றும் இந்த நிறுவனங்களிலிருந்து பட்டம் பெறுகின்ற மருத்துவர்கள் மற்றும் பல் மருத்துவர்கள் மிகவும் திறமை வாய்ந்தவராக இருந்தனர். எனவே, உயர்நிலைப் பாடத்திட்டம் போதுமான தரத்தில் இருப்பதினால் இந்த மாநிலத்தில், தகுதித்தேர்வின் அடிப்படையில் சேர்க்கையானது நடைபெற்றது என்பதால் மட்டுமே, அது எந்த வகையிலும் கல்வியின் தரத்தை குறைத்துவிடாது. மேலும், மதிப்பெண்கள் நெறிப்படுத்துதல் முறை மூலம் சரி செய்யப்பட்டால் அது முறையான, நியாயமான மற்றும் நடுநிலையான சேர்க்கை முறையை வழங்கும். மருத்துவக் கல்வி படிப்புகளுக்கான சேர்க்கையினை இந்திய அரசியலமைப்பின் VII–வது அட்டவணையின் III–வது பட்டியலில் 25வது உள்ளீட்டில் காணலாம். எனவே, மாநில அரசானது அதை முறைப்படுத்த தகுதியுடையதாகிறது. உயர் மட்டக்குழுவின் பரிந்துரையை கவனமாக பரிசீலித்தப்பின்பு சமூக நீதியை உறுதி செய்யவும், சமத்துவம் மற்றும் சம வாய்ப்பினை நிலைநிறுத்தவும், பாதிப்பிற்குள்ளாகக்கூடிய அனைத்து மாணவர் சமுதாயத்தினரையும் பாகுபாடு காட்டுவதிலிருந்து பாதுகாக்கவும் மற்றும் அவர்களை மருத்துவ மற்றும் பல் மருத்துவ கல்விக்கான பெருந்திரள் நிலைக்கு கொண்டு வந்து, அதன்படி, மாநிலத்தில், முக்கியமாக கிராமப் பகுதிகளில் வலுவான பொது சுகாதார நலனை உறுதி செய்யவும், மருத்துவ இளநிலை பட்ட படிப்புகளில் சேர்க்கைக்காக தேசிய தகுதி மற்றும் நுழைவு தேர்வின் தேவையை விட்டுவிடவும் மற்றும் நெறிப்படுத்துதல் முறை மூலம் தகுதி தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் கூறப்பட்ட படிப்புகளுக்கான சேர்க்கையை வழங்கவும் சட்டம் ஒன்றை இயற்ற அரசானது முடிவு செய்துள்ளது.

3. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவுக்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

மா. சுப்பிரமணியன்,
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு

இச்சட்டமுன்வடிவின் 1 (2), 4 (3), 12, 13 மற்றும் 14 ஆகிய கூறுகள், இதில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக, நேர்விற்கேற்ப, விதிகளைச் செய்வதற்கும் அல்லது அறிவிக்கைகள் அல்லது ஆணைகளை வழங்குவதற்கும் அரசிற்கு அதிகாரம் அளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி, தனித்தன்மை வாய்ந்ததல்ல.

மா. சுப்பிரமணியன்,
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

சென்னை-600 009,
2021 செப்டம்பர் 13.

கி. சீனிவாசன்,
செயலாளர்.

2021–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2021

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2021–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 22/1959.

79–B–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

2. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தின் 79–B–ஆம் பிரிவில், (3) மற்றும் (4)–ஆம் உட்பிரிவுகளுக்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(3) (2)–ஆம் உட்–பிரிவின் படி தண்டனைக்குரிய குற்றச்செயலானது, கைது செய்தலுக்குரிய மற்றும் பிணையில் விடத்தக்கதல்லாததாக இருத்தல் வேண்டும் மற்றும் கைது செய்தலுக்குரிய மற்றும் பிணையில் விடத்தக்கதல்லாத குற்றங்கள் தொடர்பான 1973–ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் 2/1974) வகைமுறைகளானவை அந்த குற்றச் செயலுக்கும் பொருந்துதல் வேண்டும்.".

நோக்கக் காரண விளக்கவுரை.

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களின் ஆக்கிரமிப்பானது அதிகரித்து வருவதாக அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 79–B–ஆம் பிரிவில் (3)–ஆம் உட்பிரிவின் படி ஆணையரின் எழுத்து வடிவிலான புகார் ஒன்றின் பேரினாலன்றி, அற அல்லது சமய நிறுவனம் அல்லது நிலைக்கொடை ஒன்றுக்கு சொந்தமான சொத்து எதனின் சட்ட விரோதமான உடைமையுடன் தொடர்புடைய குற்றத்தினை நீதிமன்றம் எதுவும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் ஆகாது. கூறப்பட்ட குற்றமானது கடுமையான தன்மை வாய்ந்ததாகும். எனவே, சமய நிறுவனத்தின் பொதுவிவகாரங்களில் ஆர்வம் கொண்டுள்ள நபரெவராலும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான குற்றவியல் புகாரானது தாக்கல் செய்யப்படலாமென கருதப்படுகிறது. எனவே, கூறப்பட்ட குற்றத்தினை கைது செய்தலுக்குரிய மற்றும் பிணையில் விடத்தக்கதல்லாததாக்கவும் மற்றும் இந்த நோக்கத்திற்காக கூறப்பட்ட சட்டத்தின் 79–B–ஆம் பிரிவினை திருத்துவதெனவும் அரசானது முடிவு செய்துள்ளது.

2. இந்த சட்ட முன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

பி.கே.சேகர்பாபு,
இந்து சமயம் மற்றும்
அறநிலையத்துறை அமைச்சர்.

சென்னை-600 009,
2021 செப்டம்பர் 13.

கி. சீனிவாசன்,
செயலாளர்.

2021—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2021

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம், 2021—ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 22/1959. 2. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தின் 7—A—ஆம் பிரிவில்,— 7—A—ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

(1) (2)—ஆம் உட்பிரிவில், "மூன்று ஆண்டுகள்" என்ற சொற்றொடருக்காக, "இரண்டு ஆண்டுகள்" என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2)—ஆம் உட்பிரிவின் பின்பு, பின்வரும் உட்பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"(2–A) 2021–ஆம் ஆண்டு **தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம்** தொடங்கப்பட்ட நாளன்று, இரண்டு ஆண்டுகள் பதவிக்கால அளவை நிறைவு செய்திருக்கிற, மாவட்டக்குழுவின் உறுப்பினராக பதவி வகிக்கும் ஒவ்வொரு நபரும், பதவி வகிப்பது உடனடியாக அற்றுப்போதல் வேண்டும் மற்றும் அத்தகையத் தேதிக்குப் பின்பு, இரண்டு ஆண்டுகள் பதவிக்கால அளவை நிறைவு செய்திருப்பவர், அத்தகைய நிறைவின் போது பதவி வகித்தல் அற்றுப்போதல் வேண்டும்.".

நோக்கக் காரண விளக்கவுரை.

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959), 7–A–ஆம் பிரிவானது சமய நிறுவனங்களில் மரபுவழி சாராத அறங்காவலர்களாக பணியமர்த்துவதற்காக, நபர்களின் பெயர்ப் பட்டியல் தயாரிப்பதற்காக, ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மாவட்டக் குழுவை அமைப்பதற்கு வகைசெய்கிறது. மாவட்டக் குழுவின் உறுப்பினர்கள், அறிஞர்கள், கொடையாளிகள் அல்லது சமய எண்ணம் கொண்டவர்களாக மற்றும் அந்தச் சட்டத்தின் கீழ் அறங்காவலர்களாக பணியமர்த்த தகுதியுடையவராக இருத்தல் வேண்டும் மற்றும் அவர்களின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாக இருத்தல் வேண்டும்.

2. சமய நடவடிக்கைகளில் பலர் ஆர்வம் காட்டுவதால், மாவட்டக் குழுக்களில் அவர்களின் பங்கேற்பானது, சமய நிறுவனங்களில் அறங்காவலர்களை பணியமர்த்துவதற்காக, சரியான மற்றும் தகுதியான நபர்களின் தேர்வினை, உறுதிசெய்யலாம். எனவே, சமய நிறுவனங்களில் மரபுவழி சாராத அறங்காவலர்களாக பணியமர்த்துவதற்காக நபர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கையில் அதிக எண்ணிக்கையிலான அறிஞர்கள், கொடையாளிகள், சமய எண்ணம் கொண்டவர்கள், மூத்த குடிமக்கள், பெண்கள் மற்றும் பிற ஆர்வலர்களுக்கு வாய்ப்பளிப்பதாக கருதப்படுகிறது. மேற்கண்ட சூழலில், தேவையான திறன், அர்ப்பணிப்பு மற்றும் திறமை கொண்ட மூத்த குடிமக்கள், பெண்கள் மற்றும் பிற ஆர்வலர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவது மற்றும் சமய நிறுவனங்களின் நிர்வாகத்திற்கும், அறங்காவலர்களின் பணியமர்த்தத்தை வலுப்படுத்தவும் மற்றும் ஊக்கமளிக்கவும் அவசியமாகி உள்ளது. எனவே, மேற்சொன்ன சட்டத்தை திருத்துவதன் மூலம் மாவட்டக் குழு உறுப்பினர்களின் பதவிக் காலத்தை மூன்று ஆண்டுகளில் இருந்து இரண்டு ஆண்டுகளாகக் குறைக்க அரசு முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

பி.கே. சேகர்பாபு,
இந்து சமயம் மற்றும்
அறநிலையத்துறை அமைச்சர்.

சென்னை-600 009,
2021 செப்டம்பர் 13.

கி. சீனிவாசன்,
செயலாளர்.

2021–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் **13**–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் **130**–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2021

2021–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும், மாநிலத் தொகுநிதியத்திலிருந்து தொகைகளை ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்திரெண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. இந்தச் சட்டம், 2021–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச்(எண். 2) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு.

2. மாநில அரசு, 2021–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டத்தின் 2–ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட இரண்டு இலட்சத்து இருபத்தொன்றாயிறத்து எழுநூற்று அறுபத்தாறு கோடியே முப்பத்து ஐந்து இலட்சத்து நாற்பதாயிரம் தொகையை உள்ளடக்குகின்றதும், 2021–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் தேவைப்படுவதுமான மூன்று இலட்சத்து முப்பத்தைந்தாயிரத்து இருநூற்று எண்பத்தெட்டு கோடியே பதிமூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேற்படாததொரு தொகையை–

தமிழ்நாடு சட்டம் 10/2021.

2021–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் மாநிலத் தொகுநிதியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்தல்.

(a) இணைப்புப் பட்டியலின் (3)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காகத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட மானியங்களையும்;

(b) இணைப்புப் பட்டியலின் (4)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காக மாநிலத் தொகுநிதியத்திற்குச் *சாட்டப்பட்ட* செலவினத்தையும்;

எதிர்கொள்வதற்காக மாநிலத் தொகுநிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்யலாம்.

இணைப்புப் பட்டியல்.
(2–ஆம் பிரிவைக் காண்க).

கோரிக்கை எண்	பணிகளும் நோக்கங்களும்		கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது	மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது*	மொத்தம்
(1)	(2)		(3)	(4)	(5)
			(ரூ.)	(ரூ.)	(ரூ.)
001	மாநில சட்டமன்றம்	வருவாய்	76,78,03,000	*55,83,000*	77,33,86,000
		மூலதனம்	...	...	...
		கடன்	1,00,00,000	...	1,00,00,000
002	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	வருவாய்	46,38,26,000	*16,54,06,000*	62,92,32,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
003	நீதி நிருவாகம்	வருவாய்	1,089,50,38,000	*271,92,50,000*	1,361,42,88,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
004	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	வருவாய்	3,717,03,02,000	*20,01,53,000*	3,737,04,55,000
		மூலதனம்	404,88,93,000	...	404,88,93,000
		கடன்	40,00,000	...	40,00,000
005	வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை	வருவாய்	12,249,72,61,000	*1,66,000*	12,249,74,27,000
		மூலதனம்	549,39,37,000	...	549,39,37,000
		கடன்	130,75,00,000	...	130,75,00,000
006	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)	வருவாய்	1,177,34,55,000	*1,000*	1,177,34,56,000
		மூலதனம்	470,32,38,000	...	470,32,38,000
		கடன்	25,00,000	...	25,00,000
007	மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)	வருவாய்	568,81,69,000	*1,000*	568,81,70,000
		மூலதனம்	580,97,29,000	...	580,97,29,000
		கடன்	...	...	...
008	பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)	வருவாய்	44,37,08,000	*1,000*	44,37,09,000
		மூலதனம்	2,000	...	2,000
		கடன்	...	...	...
009	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	வருவாய்	1,067,06,62,000	*5,56,000*	1,067,12,18,000
		மூலதனம்	88,83,88,000	...	88,83,88,000
		கடன்	40,00,000	...	40,00,000
010	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	வருவாய்	493,91,72,000	*3,000*	493,91,75,000
		மூலதனம்	...	...	...
		கடன்	28,88,000	...	28,88,000
011	முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	வருவாய்	345,73,71,000	*1,000*	345,73,72,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
012	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	வருவாய்	6,247,77,70,000	*3,000*	6,247,77,73,000
		மூலதனம்	11,58,56,000	...	11,58,56,000
		கடன்	2,61,60,000	...	2,61,60,000

கோரிக்கை எண்	பணிகளும் நோக்கங்களும்		கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது	மாநிலத் தொகுநிதியத்திற்கு சாட்டப்பட்டது	மொத்தம்
(1)	(2)		(3)	(4)	(5)
			(ரூ.)	(ரூ.)	(ரூ.)
013	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	வருவாய்	8,617,86,96,000	*4,000*	8,617,87,00,000
		மூலதனம்	867,63,50,000	...	867,63,50,000
		கடன்	1,000	...	1,000
014	எரிசக்தித் துறை	வருவாய்	15,509,82,04,000	*1,000*	15,509,82,05,000
		மூலதனம்	500,84,41,000	...	500,84,41,000
		கடன்	1,266,03,04,000	...	1,266,03,04,000
015	சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)	வருவாய்	21,45,08,000	...	21,45,08,000
		மூலதனம்	1,000	...	1,000
		கடன்	1,05,00,000	...	1,05,00,000
016	நிதித் துறை	வருவாய்	1,358,41,23,000	*5,000*	1,358,41,28,000
		மூலதனம்	620,00,01,000	...	620,00,01,000
		கடன்	126,56,53,000	...	126,56,53,000
017	கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	வருவாய்	1,220,11,23,000	*1,000*	1,220,11,24,000
		மூலதனம்	1,000	...	1,000
		கடன்	1,00,04,000	...	1,00,04,000
018	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	வருவாய்	223,95,20,000	*2,000*	223,95,22,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
019	மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை	வருவாய்	16,325,29,46,000	*1,63,25,000*	16,326,92,71,000
		மூலதனம்	2,606,16,79,000	*1,000*	2,606,16,80,000
		கடன்	10,01,000	...	10,01,000
020	உயர் கல்வித் துறை	வருவாய்	5,020,47,44,000	*2,000*	5,020,47,46,000
		மூலதனம்	348,61,69,000	*2,000*	348,61,71,000
		கடன்	3,000	...	3,000
021	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	வருவாய்	1,715,02,16,000	*2,000*	1,715,02,18,000
		மூலதனம்	16,183,89,73,000	*2,000*	16,183,89,75,000
		கடன்	25,00,000	...	25,00,000
022	காவல் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	வருவாய்	8,641,58,06,000	*4,21,74,000*	8,645,79,80,000
		மூலதனம்	281,50,05,000	...	281,50,05,000
		கடன்	3,00,01,000	...	3,00,01,000
023	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	வருவாய்	379,46,70,000	*3,32,000*	379,50,02,000
		மூலதனம்	25,63,36,000	...	25,63,36,000
		கடன்	1,000	...	1,000
024	சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	வருவாய்	385,40,72,000	*4,000*	385,40,76,000
		மூலதனம்	4,81,57,000	...	4,81,57,000
		கடன்	...	...	...
025	இயக்கவூர்திகள் குறித்த சட்டங்கள் – நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	வருவாய்	408,99,32,000	*1,000*	408,99,33,000
		மூலதனம்	1,000	...	1,000
		கடன்	...	...	...

கோரிக்கை எண்	பணிகளும் நோக்கங்களும்		கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல்		
			சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது	மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது*	மொத்தம்
(1)	(2)		(3)	(4)	(5)
			(ரூ.)	(ரூ.)	(ரூ.)
026	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	வருவாய்	4,951,87,70,000	*2,000*	4,951,87,72,000
		மூலதனம்	50,00,04,000	...	50,00,04,000
		கடன்	3,168,95,03,000	...	3,168,95,03,000
027	தொழில் துறை	வருவாய்	2,207,50,05,000	*14,34,22,000*	2,221,84,27,000
		மூலதனம்	12,00,02,000	...	12,00,02,000
		கடன்	100,00,03,000	...	100,00,03,000
028	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	வருவாய்	150,87,72,000	...	150,87,72,000
		மூலதனம்	1,000	...	1,000
		கடன்	...	...	...
029	சுற்றுலா – கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	வருவாய்	135,22,85,000	*7,000*	135,22,92,000
		மூலதனம்	52,16,28,000	...	52,16,28,000
		கடன்	20,00,000	...	20,00,000
030	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	வருவாய்	148,72,70,000	*9,04,000*	148,81,74,000
		மூலதனம்	5,000	...	5,000
		கடன்	...	...	...
031	தகவல் தொழில்நுட்பவியல் துறை	வருவாய்	68,25,69,000	...	68,25,69,000
		மூலதனம்	...	...	...
		கடன்	25,00,000	...	25,00,000
032	தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை	வருவாய்	1,693,74,82,000	*6,000*	1,693,74,88,000
		மூலதனம்	64,47,62,000	...	64,47,62,000
		கடன்	1,00,00,000	...	1,00,00,000
033	சட்டத் துறை	வருவாய்	73,59,06,000	...	73,59,06,000
		மூலதனம்	...	...	...
		கடன்	25,00,000	...	25,00,000
034	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	வருவாய்	9,085,75,74,000	*3,000*	9,085,75,77,000
		மூலதனம்	8,589,15,08,000	...	8,589,15,08,000
		கடன்	542,37,45,000	...	542,37,45,000
035	மனித வள மேலாண்மைத் துறை	வருவாய்	121,72,54,000	*88,43,02,000*	210,15,56,000
		மூலதனம்	5,87,27,000	...	5,87,27,000
		கடன்	50,00,000	...	50,00,000
036	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	வருவாய்	190,67,69,000	*4,000*	190,67,73,000
		மூலதனம்	123,25,01,000	...	123,25,01,000
		கடன்	10,00,000	...	10,00,000
037	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	வருவாய்	163,54,56,000	*2,000*	163,54,58,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
038	பொதுத் துறை	வருவாய்	1,060,15,51,000	*10,36,44,000*	1,070,51,95,000
		மூலதனம்	2,000	...	2,000
		கடன்	6,50,00,000	...	6,50,00,000

கோரிக்கை எண்	பணிகளும் நோக்கங்களும்		கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது	மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது*	மொத்தம்
(1)	(2)		(3)	(4)	(5)
			(ரூ.)	(ரூ.)	(ரூ.)
039	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	வருவாய்	394,85,20,000	*1,000*	394,85,21,000
		மூலதனம்	1,779,05,72,000	...	1,779,05,72,000
		கடன்	10,00,000	...	10,00,000
040	நீர்வளத் துறை	வருவாய்	2,766,45,42,000	*1,000*	2,766,45,43,000
		மூலதனம்	3,845,86,17,000	*5,05,55,000*	3,850,91,72,000
		கடன்	...	...	...
041	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை	வருவாய்	7,554,19,02,000	*11,000*	7,554,19,13,000
		மூலதனம்	74,000	*21,68,52,000*	21,69,26,000
		கடன்	45,00,000	...	45,00,000
042	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	வருவாய்	19,063,17,79,000	*5,000*	19,063,17,84,000
		மூலதனம்	3,783,62,53,000	...	3,783,62,53,000
		கடன்	15,00,000	...	15,00,000
043	பள்ளிக் கல்வித் துறை	வருவாய்	32,456,53,81,000	*15,000*	32,456,53,96,000
		மூலதனம்	142,70,87,000	...	142,70,87,000
		கடன்	29,50,000	...	29,50,000
044	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	வருவாய்	615,62,56,000	*1,000*	615,62,57,000
		மூலதனம்	65,06,000	...	65,06,000
		கடன்	15,00,000	...	15,00,000
045	சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை	வருவாய்	5,697,98,30,000	*3,000*	5,697,98,33,000
		மூலதனம்	73,25,93,000	...	73,25,93,000
		கடன்	25,01,000	...	25,01,000
046	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	வருவாய்	80,00,77,000	*3,000*	80,00,80,000
		மூலதனம்	...	...	...
		கடன்	25,00,000	...	25,00,000
047	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	வருவாய்	373,09,97,000	*6,00,00,000*	379,09,97,000
		மூலதனம்	1,000	...	1,000
		கடன்	...	...	...
048	போக்குவரத்துத் துறை	வருவாய்	2,877,45,01,000	...	2,877,45,01,000
		மூலதனம்	2,167,48,81,000	...	2,167,48,81,000
		கடன்	451,70,01,000	...	451,70,01,000
049	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	வருவாய்	225,37,14,000	*1,000*	225,37,15,000
		மூலதனம்	1,000	...	1,000
		கடன்	25,00,000	...	25,00,000
050	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	வருவாய்	28,244,48,90,000	*6,10,65,000*	28,250,59,55,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
051	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	வருவாய்	10,791,84,56,000	*2,000*	10,791,84,58,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...

கோரிக்கை எண்	பணிகளும் நோக்கங்களும்		கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல்		
			சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது	மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது*	மொத்தம்
(1)	(2)		(3)	(4)	(5)
			(ரூ.)	(ரூ.)	(ரூ.)
052	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	வருவாய்	778,66,60,000	*1,000*	778,66,61,000
		மூலதனம்	34,70,96,000	...	34,70,96,000
		கடன்	25,00,000	...	25,00,000
053	சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை	வருவாய்	630,12,66,000	*1,000*	630,12,67,000
		மூலதனம்	...	...	...
		கடன்	25,00,000	...	25,00,000
054	வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)	வருவாய்	561,78,40,000	...	561,78,40,000
		மூலதனம்	70,70,11,000	...	70,70,11,000
		கடன்	...	...	...
	கடன் செலவுகள்	வருவாய்	...	*44,700,01,31,000*	44,700,01,31,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
	பொதுக் கடன்–திருப்பிச் செலுத்துதல்	வருவாய்	...	...	...
		மூலதனம்	...	...	...
		கடன்	...	*19,857,38,45,000*	19,857,38,45,000
	மொத்தம்	வருவாய்	**220,115,63,71,000**	***45,140,35,14,000***	**265,255,98,85,000**
		மூலதனம்	**44,340,09,89,000**	***26,74,12,000***	**44,366,84,01,000**
		கடன்	**5,807,92,19,000**	***19,857,38,45,000***	**25,665,30,64,000**
	பெருமொத்தம்		**270,263,65,79,000**	***65,024,47,71,000***	**335,288,13,50,000**

நோக்க – காரண விளக்கவுரை.

இச்சட்ட முன்வடிவானது–

(a) 2021– ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டிற்காக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட மானியங்களையும்;

(b) அந்த ஆண்டிற்காக, மாநிலத் தொகுநிதியத்தின் மீது *சாட்டப்பட்ட* செலவினத்தையும்,

எதிர்கொள்வதற்குத் தேவைப்படும் தொகைகளை மாநிலத்தின் தொகு நிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்காக, அரசமைப்புச் சட்டத்தின் 204–ஆம் உறுப்பின் (1)–ஆம் கூறினையொட்டி அறிமுகப்படுத்தப்படுகின்றது.

முனைவர் பழனிவேல் தியாகராஜன்,
நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர்.

சென்னை-600 009,
2021 செப்டம்பர் 13.

கி. சீனிவாசன்,
செயலாளர்.

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.